பக்கங்கள் 6 விலை சதம் 40 ★

# ஈழநாடு

The EELA NADU

மலர் 19 யாழ்ப்பாணம் மார்கழி 15 முஹறம் 18 வெள்ளிக்கிழமை இதழ் 320 30-12-77

குண்டசாலை மாணவர்களுக்கு

## 'போராடியாவது இடம் மாற்றித்தருவேன்'

### எதிர்க்கட்சித் தலைவர் வாக்குறுதி

(யாழ்ப்பாணம்)

குண்டசாலை மாணவர்களுக்கு கரடியன் ஆற்றில் தனியான விவசாய பாடசாலை அமைக்க அரசு என்முன்னுலே ஆணைபிறப்பித்தது. ஆனல், அரசுத தலைவர்கள் மனம் மாறினலும் அதிகாரிகள் மனம மாருத காரணத்தால் தமிழ் மாணவர்களை மீண்டும் குண்டசாலைக்கு அழைத்துள்ளனர். எந்த ஒரு மாணவரும் மீண்டும் குண்டசாலைக்கு செல்ல வேண்டியதில்லை. நான் போராடியாவது உங்களை மீண்டும் கரடியன் ஆற்று விவசாய பாடசாலைக்கு அனுப்புகின்றேன்' என எதிர்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் நேற்று குண்டசாலை மாணவர்களுக்கு உறுதியளித்தார்.

'தீ' வெளியீட்டு விழாவில் அவர் மேலும் தொடர்ந்து கூறியதாவது: 'நான் அரசுடன் போராடி கலைப்பகுதி முதலாம் வருட மாணவர்களை யாழ். வளாகத்துக்கு கொண்டுவர முயற்சி செய்தேன். அந்நேரத்தில் கொழும்புவித்தியோதய வளாகத்து தமிழ்மாணவர் ஒருவரி இங்கு வரமறுத்தார். இதனுல் நாம்தான் இந்த நடவடிக்கையை ஊக்குவிப்பதாக அரசு குற்றம்சாட்டியுள்ளது. இப்படியாக எமது மாணவ தலைவர்கள் ஒருங்கிணைந்து ஒரு வெழுப்பினுல் மட்டுமே எதையும் செய்யமுடியும். இவ்வகையில் குண்டசாலை விவசாயக் கல்லூரி மாணவர்கள் ஒருங்கிணைந்து போகமறுத்தால் உடனடியாக கரடியன் ஆற்றுக்கு உங்களை அனுமதிக்கமுடியும் என்ருர். [கெ]

# அரசுக்கு அவகாசம் கொடுத்தது ஏன்?

## இளைஞர்களுக்கு 'அமிர்' விளக்கம்

(யாழ்ப்பாணம்)

"தமிழ்மக்கள் பிரச்னைகளைத் தீர்ப்பதாகக் கூறும் இன்றைய அரசுக்கு தமிழர் விடுதலைக்கூட்டணி அவகாசம் கொடுத்திருக்கிறதல்லவா? இதுபற்றி தமிழர் விடுதலைக்கூட்டணியின் செயலதிபரும் தேசிய அரசுப்பேரவை எதிர்க்கட்சித்தலைவருமான திரு. அ. அமிர்தலிங்கம் நேற்று விளக்கம் அளித்தார்.

யாழ் றிம்மர் மண்டபத்தில் நடைபெற்ற 'தீ' நூல் வெளியீட்டுவிழாவில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றிய திரு. அமிர்தலிங்கம் இளைஞர்கள் கேட்ட கேள்விகளுக்குப் பதிலளித்தார்.

குண்டசாலை விவசாயக் கல்லூரியில் இனக்கலவரத்தின்போது நிகழ்ந்த சம்பவங்களை தொகுத்து எழுதப்பட்டுள்ள இந் நூலின் வெளியீட்டு விழாவுக்கு யாழ். வளாக துணைமன்றத்தலைவர் திரு. மு. சிவதாஸ் தலைமைவகித்தார்.

"இன்றைய பிரதமர் திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனு தம்து அரசியல்சாணக்கியத்தினுல், இலங்கையில் உள்ள சிறுபான்மை இனத்தின் பிரச்னைகளைத் தீர்க்கப்போவதாக உலகநாடுகளை நம்பவைத்துள்ளார். இந்நிலையில் நாம் நமது இலட்சியத்தின் மீதுள்ள நம்பிக்கையினுல், இந்த அரசுக்கு சிறு அவகாசம் அளிக்கத் தவறினுல் நாம் எமது போராட்டத்துக்கு உலக நாடுகளின் அபிமானத்தைப் பெறமுடியாமல் போய்விடலாம். இதற்காகவே நாம் அரசுக்கு இந்த அவகாசத்தை அளித்திருக்கிறேம். ஆனுல் நாம் தேர்தலில் மக்களுக்கு அளித்த வாக்குறுதியை மாற்றிச் செயல்படுவதானுல் இந்தப் பதவிகளை ராஜினுமாச்செய்து மீண்டும் மக்கள் முன் எமது கொள்கையை வைத்து வெற்றிபெற்ற பின்னரே அதன்படி செயல்படுவோம்."

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்; "நாம் முன்னைய அரசாங்கத்துக்கு இரண்டரை வருடங்களாக எந்தவித எதிர்ப்பும் கொடுக்கவில்லை. பின்னர் இந்த நாட்டில் ஓர் அரசியல் அமைப்பை உருவாக்கியபின்னர்தான் நாம் கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டம், சட்டமறுப்பு, சிறைவாசம், பகிஷ்கரிப்பு என்றெல்லாம் எமது போராட்டத்தை விரிவுபடுத்தினேம். ஆனுல், அரசுக்கு எதிராக இயங்கினுலும் இயங்கமறுத்தாலும், எமது இலட்சியத்திலிருந்து மாறவில்லை என்பதை நீங்கள் உணர்கின்றீர்கள் என்ருர்.

அவர் மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது;

எமது இயக்கம் பலம் பெற்று ஒரு உண்மையான போராட்டத்துக்கு தயாரான நிலையில் நாம் எம்மைத் தயார் படுத்தவில்லை.

இந்த ஆண்டில் நடைபெற்ற இனக்கலவரத்தில் எமது தமிழ்ப்பகுதியான திருகோணமலை, வவனியாவில் உள்ள தமிழ்குடும்பங்களைக்கூட நாம் பாதுகாக்கமுடியாத நிலையில் இருந்தோம். இவர்களைப் பாதுகாக்க பல இளைஞர்களை அனுப்பத் தயாராக இருந்தும் கூட அவர்கள் அங்கு இருக்க விரும்பவில்லை. எமது தமிழ்ப் பகுதியை நாம் இன்னும் பாதுகாக்க தயாராகவில்லை.

### அனுபவம் தேவை

இளைஞர்கள் இன்று அதிவேகமாக, அனுபவம் என்ற அறிவில்லாமல், கூட்டணித் தலைவர்களை தூஷிக்கின்றனர் ஆனுல் அவர்களிடம் அறிவு இருக்கின்றது, எம்மைப்போல அனுபவம் அடையவில்லை'

### இன்றைய பிரதமர்

இலங்கையை ஆண்ட பிரதமர்களில் இன்றைய பிரதமர் திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனுவிடம் மற்றைய பிரதமர்களிடம் இல்லாத அரசியல் சாணக்கியம் உண்டு. இந்நிலையில் எமது இலட்சியத்தை வென்றெடுப்பதற்கு எமது போராட்டத்தை எந்த வழியில் விரிவுபடுத்தலாம் என்பதை எவ்வளவோ இன்னல்களுக்கு மத்தியில்தான் ஆராயவேண்டியிருக்கின்றது.

நான் இளைஞனுக இருந்த காலத்தில் பண்டா - செல்வா ஒப்பந்தத்தை நிறைவேற்றிய தருணத்தில் அமைச்சராகவிருந்த திரு. மைத்திரிபால சேனநாயக்கா வேண்டுமென்றே தமிழ்ப்பகுதிகளுக்கு சிங்கள சிறீ பஸ்களை அனுப்பி வைத்தார். நாம் செயற்குழுவைக் கூட்டி தந்தை செல்வாவின் சொல்லையும் கேளாமல் சிங்கள சிறீயை எதிர்க்கத் தீர்மானம் நிறைவேற்றினேம். பின்னர் இதன்விளைவால் பண்டா-செல்வாஒப்பந்தம்கிழிக்கப்பட வேண்டிய சந்தர்ப்பம் உருவானதற்கு இன்றுஎனது அனுபவ

[6ம் பக்கம் பார்க்க]

## மயிர் விழுங்கும் பையன்

புதுடில்லி, டிச. 29

உஜ்ஜயனியில் சவரத்தொழிலாளி ஒருவரின் 7 வயது மகனின் வயிற்றில் இருந்து டாக்டர்கள் ஒரு [illegible] சிகிச்சை மூலம் வெளியில் எடுத்தனர்.

இந்தப் பையன் தன் மயிரை அடிக்கடி கையால் பிடுங்கி விழுங்கிவிடுவது வழக்கமாம். வயிற்றில் இருந்தமயிர்கத்தையைஅகற்றியபின் அவனது எடை அதிகரித்துள்ளது.

## 'போராட்ட நிலைக்கு இன்னும் நாம் தயாரில்லை'

(யாழ்ப்பாணம்)

"எங்களுடைய மக்களை நாம் கட்டுப்பாட்டுக்குள் நடத்திக்கொள்ள முடியாது. கட்டுப்பாட்டுக்குள் இயங்குகின்ற பொறுப்பை இன்னும் அவர்கள் அடையவில்லை. இளைஞர் அமைப்பாயிருந்தாலும் சரி, கூட்டணி அமைப்பாயிருந்தாலும்சரி அவர்கள் இன்னும் போராட்டத்துக்கு தயாரில்லை" என எதிர்க் கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் 'தீ' வெளியீட்டு வைபவத்தில் கூறினர்.

'யுத்தகளத்தில் உள்ள தளபதி தனது படையை சில சமயங்களில் பின்னேக்கிச் செல்லக் கட்டளையிடுவதுண்டு அந்நேரத்தில் யாராவது போர்வீரன் எனக்கு அறிவுண்டு நான் முன்னேக்கிச் செல்வேன் என்ருல், அவனைச்சுட்டு வீழ்த்துவதைத் தவிர வேறு வழியில்லை. இதைப் போலத்தான், தலைவர்கள் சிலசமயங்களில் அனுபவ முதிர்ச்சியினுல் செய்யும் நடவடிக்கைகள் தப்பாக தெரிந்தாலும் அவை அரசியல் சாணக்கியமாகவே இருக்கும்.

பலஸ்தீனப் போர் 30 வருடங்களாக பல்வேறு ரூபங்களில் நடைபெற்றன. ஆயுதம் கொண்டு அவர்கள் போராடவில்லை. பேச்சுவார்த்தைகள், இரகசிய இயக்கங்கள், நேரடி நடவடிக்கைகள், சிறைவாசங்கள் போன்ற பல்வேறு ரூபங்களில் போராடி வருகின்றனர். அதேபோலத்தான் தமிழ் தலைவர்களும், தமது இலட்சியப் பயணமான தமிழ் ஈழ போராட்டத்தை வழிநடத்திச் செல்கின்றனர்.

நான் 30 ஆண்டுகளுக்கு முன் தமிழனுக்கு தனி ராஜ்யயம் அமைக்க வேண்டுமென பல்கலைக் கழகத்தில் கோரிக்கை எழுப்பி வெளியேற்றப்பட்டேன். ஆனுல் நான் 30 வருடங்களாக காணும் கனவு நனவாகும்வரை ஓயமாட்டேன். (கெ)

## சட்டத்தரணி ஆறுமுகம் விபத்தில் மரணம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பி. ஏ. தம்பி ஒழுங்கையைச் சேர்ந்த சட்டத்தரணி சி. ஆறுமுகம் விபத்தில் சிக்கி மரணமானுர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு யாழ் நகர் வீதியொன்றில் ஸ்கூட்டரில் வேறொருவருடன் சென்றுகொண்டிருக்கையில் இருளான ஓர் இடத்தில் ஸ்கூட்டர் கம்பமொன்றுடன் மோதியதையடுத்து ஆபத்தான நிலையில் யாழ். ஆஸ்பத்திரிக்கு உடன் எடுத்துச் செல்லப்பட்ட சட்டத்தரணி நேற்று முன்தினம் இரவு காலமானுர்.

காலஞ்சென்ற சட்டத்தரணி ஆறுமுகம் சட்டத் தொழிலில் சிறந்து விளங்கினுர். தொழில் நீதிமன்ற விவகாரங்களில் தொழிலாளர் சார்பில் இவர் வாதாடிப் பல வெற்றிகளை ஈட்டிக் கொடுத்ததினுல் இவர் தொழிலாளவர்க்கத்தின் மத்தியில் மிகுந்த செல்வாக்குடன் திகழ்ந்தார்.

இலங்கை- செக்கோஸ்லவாக்கிய நட்புறவுச் சங்கத்தின் செயலாளராகவும் பணியாற்றிய சட்டத்தரணி ஆறுமுகம் ஒரு சிறந்த சமூகசேவையாளராகவும் துலங்கினுர்.

இவருடன் விபத்துக்குள்ளான பரூக் என்பவர் யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவருகிருர். [அ]

## 'ஈழநாடு' பஞ்சாங்கம்

'ஈழநாடு' புதுவருட பஞ்சாங்கம் இம்மாதம் 31-ம் திகதி 'ஈழநாடு' பிரதியுடன் இணைந்திருக்கும். வாசகர்கள் தமது தேவைகளுக்கு முன்கூட்டியே எமது ஏஜண்டுகளிடம் பதிவுசெய்து கொள்ளவும். ஏஜண்டுகள் 'ஈழநாடு' விநியோகப் பகுதியுடன் தொடர்பு கொள்ளும்படி கோரப்படுகின்றனர்.

## வியட்னும் கம்போடிய எல்லையில் போர்

ஹனேய், டிச 29

வியட்னும் படைகளுக்கும் கம்போடியபடைகளுக்குமிடையில் எல்லைப் பகுதியில் கடும் போர் மூண்டிருப்பதாக அறிவிக்கப்படுகின்றது.

கம்போடிய படைகள் வியட்னும் பிரதேசத்துக்குள் நுழைந்ததைத் தொடர்ந்து இந்தப் போர் மூண்டதாம்.

பெரட்பீக் பகுதியிலுள்ள எல்லைப் பிரதேசத்தில் இரு தேசப் படைகளும் மோதலில் ஈடுபட்டிருப்பதாக செய்திகள் கூறின.

# விரி விளம்பரம்

## தேவை

மரக்கடைச்சல் இயந்திரத்தில் வேலை செய்வதற்கு வேலை பழகுபவர்களும், பழகியவர்களும் தேவை. சித்திரம் வரைவதில் திறமையுள்ளவர்களுக்கு முதலிடம் வழங்கப்படும். ஆண் பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். விண்ணப்ப முடிவு திகதி 5-1-1978. செல்வா புறடக்ஸ் ஆடியபாதம் வீதி, கல்வியங்காடு சந்தி, நல்லூர். 8037

சித்திரத்தில் ஆர்வமுள்ள பெண்கள் தேவை. மாநகர எல்லைக்குள் வசிப்பவர் விரும்பத்தக்கது. உடன் விண்ணப்பிக்கவும். ரோட்டரி சங்கம், Dr. பாரதி, 568, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 8039

இளம் மங்கையர் கிறீஸ்த சங்கத்தால் அரியாலையில் நடாத்தப்படும் சுகாதார நிலையத்தில் பணியாற்றுவதற்கு பயிற்சியும், தேர்ச்சியும் பெற்ற தாதி (Nurse) தேவை சேவையிலிருந்து இளைப்பாறியவர்களும் மனுப்பண்ணலாம். 5-1-78க்கு முன்னர் திருமதி யேசுதாசன், 318, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு மனுப்பண்ணவும். 8040

## பயிற்சி

வெளிநாடுகளில் வேலை வாய்ப்புப் பெறும் இளைஞர்களுக்கு இரண்டு மாதங்களில் வெல்டிங், புளம்பிங் தொழிற்பயிற்சியளித்து திறமைசாலிகளாக்கி நற்சாட்சிப்பத்திரம் வழங்கப்படும். முப்பது வருடங்கள் அனுபவமுள்ளவர்களால் தொழில் பயிற்றப்படும். தொழில் பயில விரும்புவோர் கீழ்க்காணும் விலாசத்திற்கு விண்ணப்பிக்கவும். அல்லது நேரில் விஜயம் செய்யவும். JegajothyEngineeringInstitute, 47 1/3, Momsac Building, Stanley Road, Jaffna. 8041

## விற்பனைக்கு

நல்லூர் கந்தசுவாமிகோவிலுக் கருகாமையில் முத்திரைச் சந்தையடி. பருத்தித்துறைவீதியில் வீடுகட்ட அல்லது தொழிற்சாலை அமைக்கக் கூடிய ஒன்றரைப்பரப்புக்காணி கற்கட்டுக் கிணற்றுடன் உடனடி விற்பனைக்குண்டு விபரங்கட்கு, கு. சோமசுந்தரம், 386, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். அல்லது க. இராமநாதன், 11, நாயன்மார்வீதி, நல்லூர். 8047

## விற்பனைக்கு

''யப்பான் கசெற்றேடியோ 'Hitachi' விற்பனைக்கிருக்கின்றது. தா. காசிப்பிள்ளை, துன்னாலை வடக்கு, கரவெட்டி. 8046

CN 5176 இலக்க A 40 ஒஸ்ரின் கார் நல்ல நிலையில் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: K. கதிர்காமத்தம்பி, 321 பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். 8038

## இலங்கைப் பல்கலைக் கழகம் யாழ்ப்பாண வளாகம்

## இராமநாதன் நுண்கலைக் கல்லூரி

இராமநாதன் நுண்கலை கல்லூரியின் 1977/78-ம் கல்வியாண்டின் மூன்றும் தவணை 1978-ம் ஆண்டு ஜனவரி மாதம் 23-ந் திகதி திங்கட்கிழமை மீளத் திறக்கப்படும். முன்பு அறிவித்தபடி 1978 ஜனவரி 2-ந் திகதி ஆரம்பிக்கப்படமாட்டாது.

பதிற் பிரதி பதிவாளர்.
திருநெல்வேலி,
1977-12-28. 8045

## பழைய மாணவர் ஆண்டுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

இலங்கையிலுள்ள சென்னை கிறிஸ்தவக் கல்லூரிப் பழைய மாணவர் சங்கத்தின் ஆண்டுக் கூட்டமும், நண்பகல் விருந்துபசாரமும் அடுத்த மாதம் 22 ம் திகதி வெள்ளவத்தை பிரைட்டன் ஹோட்டலில் நடைபெறவிருப்பதாக மேற்படி சங்கத்தைச் சேர்ந்த திரு. தி. சிவயோகபதி அறிவிக்கிறார். (அ)

## மட்டக்களப்பில் கடும் மழை

(மட்டக்களப்பு)

கடந்த சில தினங்களாகப் பெய்யும் தொடர்ச்சியான பெருமழை காரணமாக, மட்டக்களப்பு நகரின் சில பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கிவிட்டன.

நகரின் மத்தியிலுள்ள பழைய வாடி வீடு வீதியும் நீரில் மூழ்கிவிட்டது.

# "ஹரிஜனரும் அர்ச்சகராக வேண்டியது மனித உரிமை"

## —கலைஞர் கருணாநிதி

சென்னை, டிச. 29

"'கோயில் கூடாது' என்பது பெரியார் அவர்களின் கொள்கையின்பாற்பட்டது. ஆனால் அந்தக் கோயிலில் ஹரிஜனத் தோழனும் அர்ச்சகராக வேண்டுமென்பது மனித உரிமையின்பாற்பட்டது. அந்த உரிமையினை நிலைநாட்டத் தொடர்ந்து பாடுபவோம்" எனத் தந்தை பெரியார் அவர்களின் நினைவு நாளில் 'பெரியார் களஞ்சியம்' என்னும் நூலை வெளியிட்டு உரையாற்றுகையில் கலைஞர் மு. கருணாநிதி கூறினார்.

அவர் தமதுரையில் மேலும் கூறியதாவது:

"எதிர்காலத்தில் வரலாறு எழுதுகிறவர்கள், ஓர் இயக்கத்தைக் குறிப்பிட்டோ அல்லது ஒரு காலத்தைக் குறிப்பிட்டோ எழுதுவதை விட்டு, இத்தகைய முன்னேற்றத்திற்கு யார் ஒருவர் காரணமாக இருந்தாரென்பதை எண்ணிப் பார்த்து, அந்தத் தலைவரைக் குறித்து எழுதுவதற்கே அதிக பக்கங்களைச் செலவிடுவார்கள் என்பது உண்மையிலும் உண்மையாகும்.

### தலைவர் யார்?

பெரியார் பிறந்தநேரத்தில் அவருடைய தாயும், தந்தையும், உற்றார், உறவினர்களும் மகிழ்ந்திருப்பார்கள். ஆனால் அவர் மறைந்த நேரத்தில் தமிழகமே அழுதது.

"ஒருவர் பிறக்கிற நேரத்தில் சிலர் மகிழ்கிறார்கள். ஒருவர் மறைகின்ற நேரத்தில் பலர் அழுகின்றார்கள் என்றால் அவர் தான் தலைவர். அத்தகைய தகுதி வாய்ந்த தலைவரை, தமிழகத்தை விழிப்படையச் செய்தவரை இன்றைக்கு இழந்து விட்டோமென்றாலும், அந்தத் தலைவரால் உருவாக்கப்பட்ட மாபெருந் தலைவரை —அண்ணாவை இழந்துவிட்டோமென்றாலும் அவர்கள் நமக்குத் தந்துள்ள கொள்கைகள், கோட்பாடுகள் இலட்சியங்கள், குறிக்கோள்களை அடைய, போற்ற மனதில் பதியவைத்துக் கொள்ள இந்த நாட்கள் பயன்பட்டாகவேண்டும்.

### நிறை வாழ்க்கை

"பெரியாருடைய உயிருக்கே ஆபத்து. அவர் ஊரில் பேசிவிட்டு, அடுத்த ஊருக்குச் செல்லமுடியாதென்ற அளவிறகுப் பயங்கரமாக அவர் சாகடிக்கப்படவேண்டும். அவருடைய பிரசாரத்தைத் தடுத்து நிறுத்தவேண்டுமென்று சிந்தித்துக்கொண்டிருந்த நேரத்தில் எல்லாம்கூடப் பெரியார் எதற்கும் கவலைப்படாமல், நெஞ்சுறுதியோடு, தான் பிறந்த இந்தச் சமுதாயத்தை வாழவைக்கத் தான் சாவதைப் பற்றிக் கவலையில்லை என்று தொண்டாற்றிய காரணத்தினால்தான் அவரால் 90 ஆண்டுகளுக்கு மேல் வாழமுடிந்தது. அதுதான் முழு வாழ்க்கை.

### நன்றியும் பெரியாரும்!

"பெரியார் ஒருமுறை சொன்னார், "எனக்குத் தெரியும், தமிழன் நன்றியுள்ளவனாகஇருக்கமாட்டான்" என்று நான் மொத்தத் தமிழ்ச் சமுதாயத்தையும் குறிப்பிடுவதாக எண்ணக்கூடாது.

"ஆனால் தமிழ்ச் சமுதாயத்தைப் பயன்படுத்திக்கொண்டு —பெரியாரைப் பயன்படுத்திக்கொண்டு நாங்களும் பகுத்தறிவுவாதிகள் எனக் கூறிக்கொண்டு மிகவும் தீவிரவாதிகளென்று கூறிக்கொண்டு தனிப்பட்ட முறையிலே பயனடைந்தவர்களால் இந்த இயக்கத்திற்குப் பெரியாரின் கொள்கைக்கு இம்மியளவும் நன்மை கிடைக்கவில்லை என்பதையே பெரியார் அவ்விதம் கூறினார்.

### பெரியாரின் சாதனை

"பெரியாரால் இன்றைக்கு முன்னுக்கு வந்திருக்கிற சமுதாயம், படிப்பது தீது, பாவம் என்றெல்லாம் ஒடுக்கப்பட்டுக் கிடந்த சமுதாயம், அடித்தளத்திலே இருத்தப்பட்ட சமுதாயம் இன்றைய தினம் உயர் நீதிமன்றத்திலே நீதிபதிகளாக வந்து அமர்கின்ற காட்சிகளைக் காண்கின்றோம். ஐ. ஏ. எஸ். அதிகாரிகளாக இருக்கின்ற காட்சிகளைப் பார்க்கிறோம்.

### நெஞ்சில் முள்ளுடன் புதைத்தோம்!

"இவ்வளவிலும் நிம்மதி அடையாத பெரியார் ஏன் ஒரு தமிழனால் கீழ்ச்சாதியிலே பிறந்ததாக சொல்லப்படுகின்ற ஒரு மனிதனால், ஐ. ஏ. அஸ் அதிகாரியாக முடிகிறது கலெக்டராக முடிகிறதென்றால் அவனால் ஆலய அர்ச்சகராக முடியாது என்ற ஏக்கத்துடன் இருந்தார். அந்த ஏக்கத்தை புரிந்துகொண்ட நாங்கள் தமிழக சட்டசபையிலே அதற்கென ஒரு சட்டத்தை இயற்றினோம். ஆனால் அந்தச் சட்டம் மத்திய அரசால் முடக்கப்பட்டுவிட்டது.

பெரியார் அவர்கள் அரசியல் சட்டத்தினை இதனை நிறைவேற்றக்கூடிய முறையில் போராடுவதற்கு புறப்பட்டார். நாளும் நேரமும் குறித்தார். ஆனால் அதற்கிடையில் பெரியார் மறைந்தார்.

பெரியார் மறைந்த நேரத்திலே நான் குறிப்பிட்டேன் "பெரியார் அவர்களை நாம் பெரியார் திடலிலே வைத்து புதைத்து விட்டோம். ஆனால் அவர் எண்ணிய காரியம் யாவிலும் வெற்றிபெற்றார். ஒன்றிலே வெற்றிபெற முடியவில்லை போராட்டம் தொடங்குவதற்கு முன்பே போய்விட்டார். எனவே அர்ச்சகர் சட்டத்திற்கு ஏற்ப அரசியல் சட்டத்தை திருத்தவேண்டும் என்கிற அவர் கருத்து வெற்றி பெற முடியாமல்போய்விட்டது அவர் நெஞ்சிலே ஒரு முள்ளை வைத்துதான் நாம் புதைக்கின்றோம்" என்று.

### கடமை

கோயில் நம்பிக்கை பெரியாருக்கு இல்லை என்பது கொள்கையின்பாற்பட்ட ஒன்று அந்தக் கோயில் உண்டா இல்லையா என்பதற்காக அந்தக் கோவிலிலே ஹரிஜன சகோதரர்கள் அர்ச்சகராக இருந்தாலென்ன என்பது உரிமையின் பாற்பட்ட தொன்றாகும் இவன் தான் ஆண்டவனால் படைக்கப்பட்டான் மற்றவனெல்லாம் ஆண்டவனின் விரோதி என்று சொன்னால் அந்த மனிதஉரிமை தடைச் சட்டத்தை தூள் தூளாக்க வேண்டுமென்பது தான் பெரியாரின் கொள்கை.

### ஜெகஜீவன்ராமுக்கு வேண்டுகோள்

அன்று இச் சட்டத்திற்கு ஏற்பட்ட முடக்கத்தை ஜெகஜீவன்ராமுக்கு எடுத்துக்கூறிய நேரமெல்லாம் அவர் உதவுவதாக சொன்னார். ஆனால் செய்யவில்லை இன்றும் அதே ஜெகஜீவன்ராம் ஜனதா அமைச்சராக இருக்கிறார். அன்று செய்யமுடியாததை இன்று செய்யக்கூடிய சூழ்நிலையில் இருக்கிறார். எனவே திராவிடமுன்னேற்றக் கழக அரசு உருவாக்கிய அந்தச்சட்டம் ஏதோ கோவிலில் அர்ச்சனை செய்ய எல்லோருக்கும் உரிமை வேண்டுமாம் என்ற சாதாரண சட்டமாக கருதாது அது மனித உரிமைகளுக்கான அடிப்படைச் சட்டங்களுள் ஒன்றாகக்கப்பட வேண்டுமென இன்று வேண்டுகோள் விடுக்கிறேன்.

அந்தச் சட்டம் உயிர்பெற்று எழுந்து நடமாடச்செய்ய வேண்டும். அதற்கு அரசியல் சட்டத்தின் 42-வது ஷரத்தை திருத்தவேண்டும். அதுவரை திராவிட இயக்கத்தார் மன நிம்மதி அடையமுடியாது" என்றார். (இ-உ)

## சுன்னாகம் பட்டண சபை

## கேள்விப்பத்திர அறிவித்தல்- 1978

சுன்னாகம் மீன் சந்தையில் 1978-ம் ஆண்டு காலப்பகுதியில் கடை இல. மீ. 7ல் ஆட்டிறைச்சி விற்பனை செய்யும் குத்தகைக்கான கேள்விகள் 1978-ம் ஆண்டு ஜனவரி மாதம் 10-ந் திகதி செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணி வரையும் விசேட ஆணையாளரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.

மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரப்பணமாக ரூ. 10/-ம், கேள்விப் பிணைப்பணமாக ரூபா 150/-ம் செலுத்துவதன் பேரில் 09-01-1978-ந் திகதி பிற்பகல் 2-30 மணி வரையும் கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம். ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விக்காரர் உடனடியாகப் பிணைப் பணத்தைச் செலுத்தி ஒப்பந்தம் செய்து கடையைப் பாரம் எடுத்தல் வேண்டும். மேலதிக விபரங்களை இவ்வலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

இ. இராமலிங்கம்,
விசேட ஆணையாளர்,
பட்டணசபை, சுன்னாகம்.

பட்டணசபை அலுவலகம்,
சுன்னாகம்,
28-12-1977. 8048

## விசேஷ கூட்டம்

[பண்டத்தரிப்பு]

பண்டத்தரிப்புப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கூட்டுறவுப் பணியாளர்கள் சங்கத்தின் விசேஷ பொதுக் கூட்டம் எதிர்வரும் ஜனவரி மாதம் 3-ம் திகதியன்று சங்க அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

பல முக்கிய பிரச்னைகள் பற்றி இக்கூட்டத்தில் ஆராயப்பட விருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. [அ]


## விலை குறைக்கப்பட்டது!

Brownson

# - பிரவுண்சன் -

எங்கள் தயாரிப்புகள் தற்பொழுது குறைக்கப்பட்ட புதிய விலைகளிலேயே விநியோகிக்கப்படுகின்றன. எங்கள் விநியோக "வான்"களிலும், விற்பனை பிரதிநிதிகள் மூலமும் குறைக்கப்பட்ட புதிய விலையில் உங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளுங்கள்.

பிரவுண்சன் இன்டஸ்ரீஸ்,
80 1/4, பிறைஸ் பிளேஸ், கொழும்பு - 12.
தொலைபேசி: 27197

### சதாத் எதிர்ப்பு

# அரபு நாடுகள் உச்சிமாநாடு அல்ஜீரியாவில் நடக்கிறது!

லண்டன், டிச. 29

எகிப்திய அதிபர் அன்வர் சதாத்தின் இஸ்ரேலுடனான பேச்சுவார்த்தைகளை எதிர்க்கும் அரபு நாடுகளின் அடுத்த உச்சி மாநாடு ஜனவரி 8ம்திகதி அல்ஜீரியாவில் நடைபெறவிருக்கிறது.

இத்தகவலை லெபனன் பத்திரிகை ஒன்று வெளியிட்டுள்ளது.

மேற்படி அரபுநாடுகள் இம்மாதம் 2ம் திகதி திரிப்பொலியில் கூட்டம் ஒன்றினை நடத்தியிருந்தன.

அல்ஜீரியா, சிரியா, ஈராக், தெற்கு ஜெர்மனி முதலான நாடுகளே மேற்படி உச்சி மாநாட்டை நடத்தவுள்ளன.

இதேவேளை மேற்கு ஜெர்மனி அதிபர் திரு. ஸ்மித் மத்திய கிழக்கு விவகாரம் சுமுகமாகத் தீர்வதற்கு ஐரோப்பிய பொருளாதார சமூக நாடுகள் ஆதரவு வழங்கும் என்று அறிவித்துள்ளார். [உ]

## கூடி வாழ்ந்தால் கழுத்தை நெரிப்பாராம்

### ஜீவனாம்ச வழக்கில் மனைவி சாட்சியம்

(மட்டுவில்)

"இனிமேல் சந்தோஷமாகக் கூடி வாழ்வேன் என்று அவர் ஒரு நாடகம் ஆடுகிறார் ஐயா. நானும் சரி என்று அவரிடம் போனால் போதும், அவ்வளவுதான் அவர் அடிப்பார், உதைப்பார் என் கழுத்தையே பிடித்துத் திருகுவார். இனிமேலும் எனக்கு வேண்டாம் அவர் உறவு, கூடி மட்டும் தந்தால் போதும் ஐயா.

இவ்வாறு தாபரிப்புப் பணம் கோரித் தாக்கல் செய்த வழக்கொன்றில் வாதியான பெண், சாவகச்சேரி மாவட்ட நீதிபதி திரு. கே. பாலகிட்ணர் முன்னிலையில் கூறினார்.

எழுதுமட்டுவாளைச் சேர்ந்த இராசமமா என்ற இளம்பெண் தமது கணவரான தனுக்காயைச் சேர்ந்த கந்தையா மகாலிங்கம் என்பவரிடமிருந்து தமக்கும், தமது இரு பிள்ளைகளுக்கும் ஜீவனாம்சம் கோரி இவ்வழக்கைத் தாக்கல் செய்துள்ளார். சாவகச்சேரி மாவட்ட நீதிபதி திரு. கே. பாலகிட்ணர் முன்னிலையில் இவ்வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

வாதிதரப்பில் சட்டத்தரணி திரு சி. பாலகிருஷ்ணரும், பிரதிவாதிதரப்பில் சட்டத்தரணி செல்வி தெய்வநாயகி கதிர்காமசேகரும் ஆஜரானார்கள். வாதி தொடர்ந்து கூறியதாவது:

"பிரதிவாதி இன்னொரு பெண்ணுடன் வாழ்ந்து கொண்டிருக்கிறார் அப்பெண் இப்போது கர்ப்பவதியாக இருக்கின்ற இ ர் என்படியை செலுத்தாமல், என்னை நடுத்தெருவில் விடுவதற்காக, என்னுடன் சந்தோஷமாக வாழவிருப்புவதாக நாடகம் ஆடுகிறார். இவரை நம்பமுடியாது ஐயா."

இதையடுத்து நீதிபதி பிரதிவாதியைப்பார்த்து, "நீர் உமது மனைவிக்கும் பிள்ளைகளுக்கும் மாதம் 50ரூபா செலுத்த வேண்டும் எதுவித பாக்கியும் இருக்கக்கூடாது" என்று கட்டளையிட்டு மேல் விசாரணையை பெப்ரவரி மாதம்வரை ஒத்திவைத்தார். (அ)

## சென்னை இசை விழாவில் இன்று இணுவில் புண்ணியமூர்த்தி தவில்

(மாவிட்டபுரம்)

ஈழத்தின் தலைசிறந்த தவில் வித்துவான்களில் ஒருவரான இணுவில் கே. ஆர். புண்ணியமூர்த்தி இன்று சென்னை தமிழிசைச் சங்க இசை விழாவில் கலந்துகொண்டு தவில் வாசிக்கிறார்.

இன்றிரவு 9-30 மணிக்குத் தமிழிசைச் சங்க அரங்கில் இடம்பெறும் பிரபல நாகசுர வித்துவான் ஷேக் சின்னமௌலானாவின் நாகசுரக் கச்சேரியில் தவில் வித்துவான் வலங்கைமான் சண்முகசுந்தரம்பிள்ளையுடன் இணைந்து இவர் தவில் வாசிக்கிறார்.

இலங்கையின் தலைசிறந்த தவில் வித்துவான்களில் ஒருவரான திரு. புண்ணியமூர்த்தி, காலஞ்சென்ற அகில உலகத் தவில் மேதை வி. தெட்சணாமூர்த்திப்பிள்ளையுடன் பல கச்சேரிகள் செய்து, தமது திறமையை வெளிக்காட்டியதுடன் தட்சணாமூர்த்தியின் வாரிசு எனவும் அழைக்கப்பட்டுவருபவராவர்.

## ரஷ்ய மாணவருக்கு தொழில், பண்ணைப்பயிற்சி

மாஸ்கோ, டிச. 29

சோவியத் யூனியன் இடைக்கால கல்விமுறையில் சீர்திருத்தம் செய்யவிருக்கிறது.

இந்தவகையில் மாணவர்கள் கல்விக்கூடங்களைவிட்டு வெளியேறுகையில் அவர்களுக்குப் போதுமான அளவு தொழிற்பயிற்சி இருக்கவேண்டும் என வலியுறுத்தப்படும்.

மாணவர்களுக்கு தொழிற்பயிற்சியும், பண்ணைப் பயிற்சியும் அளிக்க வசதி செய்யப்படுகிறது. [உ]

## யு. எஸ். அதிபரின் வெளிநாட்டு விஜயம்

வாஷிங்டன், டிச. 29

அமெரிக்க ஜனாதிபதி திரு. ஜிம்மி கார்ட்டர் தமது ஆறு நாடுகளுக்கான விஜயத்திற்கு முன் அவர் தமது ஒருவருட பதவிகால மதிப்பீடு பற்றி தொலைக் காட்சியில் விளக்குவார்.

மத்திய கிழக்கு விவகாரம் தொடர்பான தமது நிலையையும் அவர் அவ்வேளை விளக்குவார்.

வாஷிங்டனில் இருந்து போலந்து செல்லும் திரு. கார்ட்டர் ஈரான், பாரதம், பெல்ஜியம், பிரான்ஸ் உட்பட ஆறுநாடுகளுக்கும் விஜயம் செய்வார். [உ]

## யாழ்ப்பாணத்தில் விறகுத் தட்டுப்பாடு

[அரியாலை]

யாழ்ப்பாணப் பகுதியில் விறகுக்குப் பெருந்தட்டுப்பாடு நிலவுகிறது. யாழ்ப்பாணப் பகுதியிலுள்ள அரசாங்க விறகு காலைகளில் விநியோகிக்கப்படும் விறகை வாங்குவதற்காக அதிகாலையிலேயே மக்கள் நீழு வரிசைகளில் இடம்பிடிக்கிறார்கள். [அ]

## நெதர்லாந்து தேசிய தினம்

(கொழும்பு)

நெதர்லாந்தின் தேசிய தினத்தை யொட்டி இலங்கை ஜனாதிபதி திரு. வில்லியம் கோபல்லாவையும், பிரதமர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவும் வாழ்த்துச் செய்திகளை அனுப்பிவைத்துள்ளனர். (உ)

## ராஜினாமா

(யாழ்ப்பாணம்)

யாழ். வளாகத் தமிழ் மன்றத் தலைவர் திரு நா. தர்மராஜாவும், செயலாளர் திரு செ. சண்முகநாதனும் தத்தம் பதவிகளை ராஜினாமாச் செய்துள்ளனர். [உ]

### சோமாலியா மீது

# எதியோப்பியா குண்டுவீச்சு?

லண்டன், டிச. 29

எதியோப்பிய விமானங்கள் சோமாலியாவின் முக்கிய பட்டணங்கள் மீது தாக்குதல் நடத்தியது என்ற சோமாலியாவின் குற்றச்சாட்டை எதியோப்பியா மறுத்துள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி திரு. ஜிம்மிகார்ட்டர் ஈரானுக்கு விஜயம் செய்யவுள்ள இவ்வேளையில் சோமாலியா விஷமத்தனமான இக்குற்றச்சாட்டை எதியோப்பியாமீது சுமத்தியுள்ளது என்று எதியோப்பிய ராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்தன.

எதியோப்பிய ஜெட்விமானங்கள் சோமாலியாவின் பட்டணங்களில் குண்டுவீச்சு நடத்தியதில் பலர் கொல்லப்பட்டிருக்கலாம் என அஞ்சப்படுவதாகவும் தாக்குதலில் ஈடுபட்ட மூன்றுவிமானங்கள் சுட்டுவீழ்த்தப்பட்டன என்றும் சோமாலிய பாதுகாப்பு அமைச்சு குற்றஞ்சாட்டியிருந்தது. (உ)

### துப்பாக்கிக்கொள்ளை:

## சந்தேக நபர்கள் தொடர்ந்து றிமாண்டில்

(மாவிட்டபுரம்)

வலி. வடக்கு உதவி அரசாங்க அதிபர் அலுவலகத் துப்பாக்கிக் கொள்ளை குறித்து நடந்த அடையாள அணிவகுப்பில் சந்தேக நபர்கள் எவரும் அடையாளம் காணப்படவில்லை.

ஆகஸ்ட் கலவர நேரத்தில் வலி. வடக்கு உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்திற்குச் சென்ற துப்பாக்கிகள் சகிதமான இளைஞர் கோஷ்டி ஒன்று உதவி அரசாங்க அதிபரைக் கொலை செய்வதாகப் பயமுறுத்தி அங்கிருந்த துப்பாக்கியை அபகரித்துச் சென்ற சம்பவம் தொடர்பாக விசாரணை செய்துவந்த சுன்னாகம் பொலிசார் யாழ். ஒட்டுமடத்தைச் சேர்ந்த எம். சந்திரன், ஆர். உதயகுமார், எம். தங்கராசா ஆகியோரை இது சம்பந்தமாக மல்லாகம் நீதிமன்றத்தில் மல்லாகம் பதில் நீதிபதி திரு. ஆர். ஜே. செல்வரத்தினம் முன்னிலையில் அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்தினர்.

அச்சமயம் வலி. வடக்கு உதவி அரசாங்க அதிபர் திரு. க. மகாதேவா லிகிதர் எஸ். மகாதேவன், சிற்றூழியர் எம். மகாலிங்கம் ஆகியோர் அடையாளம் காண்பதில் ஈடுபட்டனர். எவரும் அடையாளம் காணப்படவில்லை.

இதையடுத்து வறுத்தலைவிளானைச் சேர்ந்த தம்பிமுத்து தம்பித்துரை என்பவரது துப்பாக்கியைக் கொள்ளையடித்தது தொடர்பாகவும் நடந்த அடையாள அணிவகுப்பில் எவரும் அடையாளம் காட்டப்படவில்லை.

இந்நபர்கள் மல்லாகம் நீதிபதி திரு. டி. யேசுரத்தினம் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டபோது நீதிபதி அவர்களை ஜனவரி 13 ம் திகதிவரை றிமாண்டில் வைக்கும்படி உத்தரவிட்டார்.

சந்தேக நபர்கள் சார்பில் சட்டத்தரணி ஏ. அன்ரனி ஆஜரானார். (அ)

## "ஜாதி முறை அருகுகிறதா?"

(யாழ்ப்பாணம்)

யாழ். வளாக மாணவர் மன்றத்தின் ஆதரவில் இன்று பிற்பகல் "தற்கால யாழ்ப்பாண சமூகத்தில் ஜாதிமுறை அருகி வருகிறதா" என்ற பொருள் பற்றிய ஆய்வரங்கு ஒன்று நடைபெறுகிறது.

பேராசிரியர் கா. இந்திரபாலா, எழுத்தாளர் கே. டானியல், நந்தினிசேவியர், எஸ். சிவலிங்கராஜா, மாஜி செனட்டர் ஜி. நல்லையா, திரு. அன்ரனிஉட்பட மற்றும் பலர் உரையாற்றுவர்.

மஹாகவியின் "கோடை" நாட்டிய நாடகமும் அரங்கேறும். (உ)

## யு. எஸ். செனட்டர்கள் சீனா செல்வர்

வாஷிங்டன், டிச. 29

அமெரிக்க செனட்டர்கள் பத்துப்பேர் சீன விஜயம் ஒன்றினை மேற்கொள்ளவிருக்கின்றனர்.

ஜனவரி மாதம் 10ம் திகதி முதல் 17ம் திகதிவரை இவர்கள் சீனாவில் தங்கியிருப்பர். [உ]

## ஸ்ரீரமணர் ஜயந்தி

(மாவிட்டபுரம்)

பகவான் ஸ்ரீரமண மகரிஷிகளின் ஜயந்தி தினம் இன்று காலை, கீரிமலை ஸ்ரீசடையம்மாள் மடத்தைச் சேர்ந்த திருத்தம்பலேஸ்வர சிவலிங்கப் பெருமான் ஆலயத்தில் கொண்டாடப்படுகிறது.

### மலையகத்தலைநகரில்

## யானை ஓட்டப் பந்தயம்!

(கண்டி)

யானைகள் கலந்துகொள்ளும் ஓட்டப்பந்தயமொன்று ஜனவரி மாதம் 2-ம் திகதி மலையகத் தலைநகர் கண்டியில் நடைபெறுகிறது.

போகம்பரை மைதானத்தில், காலை 10 மணிமுதல் பிற்பகல் 2 மணிவரை நடைபெறும் இந்த ஓட்டப்பந்தயத்தை சுமார் இரண்டாயிரம் வெளிநாட்டு உல்லாசப் பிரயாணிகள் கண்டுகளிப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கை உல்லாசப் பிரயாணச் சபை ஒழுங்குசெய்துள்ள இந்த யானை ஓட்டப்பந்தய வைபவத்தில் உணவு, விவசாய அமைச்சர் திரு. ஈ. எல். சேனநாயக்கா பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.




# 'எமது தலைவர்களிடம் எமக்கு பூரண நம்பிக்கை உண்டு'

## மகளிர் பேரவைச் செயலாளர் அறிக்கை

(யாழ்ப்பாணம்)

"எமது தலைவர்கள் மீது எமக்குப் பூரண நம்பிக்கை உண்டு. இயங்காதிருக்கும் ஒரு சில தலைவர்களையும் இயங்க வைக்கவேண்டுமென்று நாம் தீர்மானம் நிறைவேற்றினோமே தவிர, வேறெந்தத் தலைவர்களையும் கண்டித்து நாம் தீர்மானம் நிறைவேற்றவில்லை."

இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணியின் மகளிர் பேரவைச் செயலாளரும், எதிர்க் கட்சித் தலைவரின் மனைவியுமான திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் தெரிவித்திருக்கிறார்.

பேரவையின் தீர்மானம் குறித்து சில பத்திரிகைகளில் [ஈழநாடு அல்ல] வெளிவந்த செய்தி தவறானதென்று திருமதி அமிர்தலிங்கம் குறிப்பிட்டுள்ளார். [உ]

## "சமூக ஒற்றுமைக்கு ச. ச. நிலையங்கள் உழைக்கவேண்டும்"

[அரியாலை]

'நம்மிடையே இன்று ஏற்பட்டுள்ள வேற்றுமைகளை எல்லாம் மறந்து ஒன்றுபட்டுழைப்பதின் மூலமே நாம் புதிய சமுதாயம் ஒன்றைக் கட்டிவளர்க்கமுடியும். மக்களிடையேயுள்ள அறிவின்மையைபோக்க நூல் நிலையங்கள் நன்கு உதவுகின்றன. ஒருகிராமத்தை அழகு செய்வன அக்கிராமத்திலுள்ள ஆலயமும், பாடசாலையும், நூல்நிலையமுமாகும். சமூகங்களிடையே ஒற்றுமையை வளர்ப்பதுடன், சமூகத்திலுள்ள சீர்கேடுகளையும் நீக்கி சமூகத்தை வளர்க்கும் பணியை சனசமூக நிலையங்கள் மேற்கொள்ளவேண்டும்"

இவ்வாறு யாழ்ப்பாணம் கொட்டடி முத்தமிழ் சன சமூக நிலைய மண்டபத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பிரதம பேச்சாளராக கலந்து கொண்ட யாழ். மாநகர சன சமூக நிலையச் சமாசப் பொதுச்செயலாளர் திரு. எஸ். பி. ஜீவானந்தம் பேசுகையில் குறிப்பிட்டார்.

திரு. ஆ. சி.குணரத்தினம் பேசுகையில், இப்பகுதி மக்கள் தமது சனசமூக நிலையத்தின் தலைவரையே தமது வாக்குரிமையின் மூலம் தெரிவு செய்து வருவதையும் பாராட்டிப் பேசினார். (அ)

## மனத்திரையில் சோகம் நிறைக்கும் ராஜா திரை

யாழ்ப்பாண மக்களின் நெஞ்சமெல்லாம் மீண்டும் துயர்நிறைகிறது. தந்தை செல்வாவின் இறுதி யாத்திரை பற்றிய சோக நினைவு மீண்டும் அவர்கள் நினைவுக்கு வந்துள்ளதே இதற்குக் காரணமாகும்.

ஆம், யாழ்ப்பாணம் ராஜா திரையில் தந்தை செல்வாவின் இறுதி யாத்திரையின்போது, எஸ். ரி. ஆர். பிலிம்ஸார் தமது சொந்தச் செலவில் தயாரித்த திரைப்படம் தற்போது காண்பிக்கப்படுகிறது.

இத்திரைப்படம் திரையிடப்பட்ட, கடந்த திங்கட்கிழமை காலையே மக்கள் தியேட்டரை முற்றுகையிடத் தொடங்கி விட்டனர்.

"எப்போது இத்திரைப்படம் உங்கள் திரையில் திரையிடப்படும்?" என்று தினசரி திரு. எஸ். ரி. ஆருக்கு மக்களால் ஏற்பட்டுவந்த அன்புத் தொல்லைகளும் அன்று நீங்கியது.

யாழ். வீரசிங்கம் மண்டபத்தின் உள்ளே... விழி மூடித் துயில்கொள்ளும் தமிழ் வீரர் தந்தை செல்வாவின் திருவதனம் காண்பதற்குத் தெருவெங்கும் மக்கள் கூட்டம் அணி வணியாய்த் திகழ்ந்துவர...

அன்னைத் தமிழ் காத்த அன்புருவம், அகிம்சையின் மறு உருவம், தங்கத் தலைமகனும், தமிழ் ஈழத் தாபகனும், தமிழர்தம் நெஞ்சமெல்லாம் நிறைந்திட்ட தந்தை செல்வா, மீளாத் துயிலில் மூழ்கிகிடக்கின்ற காட்சி, காண்பவர் இதயம் கண்ணீர் வடிக்க வைக்க, இழந்துவிட்ட நம் தலைவரின் இறுதி ஊர்வலக் காட்சி.

தமிழ் ஈழத்தின் தானைத் தலைவனது உடல், மலர் மஞ்சத்தின் மத்தியிலே உதயசூரியன் கொடியினால். போர்த்தப்பட்டுள்ள காட்சி, பார்ப்பவர் உள்ளத்தை உருக்குவதாய் அமைந்துள்ளது.

மறைந்துவிட்ட தலைவருக்கு மாற்றுக் கட்சித் தலைவர்கள் மலர் வைத்து வணங்குகின்றனர். திருமதி செல்வநாயகத்தைச் சூழ, அருமை மகன் சுசிலியும், தமிழர் தலைவர் அமிரும், அரசியல் தலைவர்களும் அஞ்சலி செலுத்துகின்றனர்.

### தெல்லிப்பளையில்...

தந்தை செல்வாவின் உடலைத் தாங்கிய பேழை, தமிழரெல்லாம் கதறியழ-வெளிவருகின்ற காட்சி—

தமிழுக்கு வாழ்வு தந்த, தலைமகனை வழியனுப்ப வாகனங்களில் வந்திருந்த மக்கள் வெள்ளம். தெருவெங்கும் தோரணங்கள்; திசையெங்கும் மக்கள் கூட்டம், வளமாகத் தமிழை வாழவைத்துவிட்ட செல்வாவுக்கு வழியெங்கும் மலர் தூவி வணங்குகின்ற காட்சி.

செல்வாவின் மரணச் சடங்கில் மாற்றுக் கட்சித் தலைவர்களும் போற்றி உரையாற்றிய காட்சி, மாற்றானையும் அவர் கவர்ந்திருந்த மாட்சிக்குச் சாட்சியாக இருக்கிறது.

செல்வாவின் பூதவுடல்மீது தீ மூட்டப்படுகிறது. பற்றி எரிகின்ற சிதை கண்டு மக்கள் பதறித் துடிக்கின்ற காட்சி, காண்பவர் இதயங்களைக் கலங்கிட வைக்கிறது.

இத்தனை காட்சிகளையும் சிறப்பாகப் படமாக்கியுள்ளனர் எஸ்.ரி.ஆர். பிலிம்ஸார். அருமையான படப்பிடிப்போடு அமரரின் இறுதிக்காட்சியைப் பார்த்த நினைவு, எமக்கு.

இதுவரை செல்வாவின் இறுதிக் காட்சிகளைக் காணக் கொடுத்து வைக்காதவர்கள் கூட, அக்குறை நீங்க இப்படம் உதவுகிறது.

எஸ்.ரி.ஆர். பிலிம்ஸாருக்கு நன்றி கூறத் தமிழினம் கடமைப்பட்டிருக்கிறது.

--சச்சி. --ரவி.

## "நத்தார் தினம் புனிதமானது"

(அரியாலை)

"இறைவன் மனித சாயலெடுத்துமனுக்குலத்தில் பிறந்ததினால் மனிதகுலமே ரட்சிக்கப்பட்டது. இறைமகன் ஏழையின் வடிவில் தாவிதின் ஊரிலே மாட்டுக்குடிலில் பிறந்தார். அவரது பிறப்பு உலகை ரட்சித்தது. ஏழ்மையாகப் பிறந்த இவர் மனிதகுலத்தை இரட்சிக்கச் சிலுவை மரத்தில் தனது உயிரையே அர்ப்பணித்தார்."

இவ்வாறு நரிக்குண்டு மைதானத்தில் நடைபெற்ற ஐக்கிய நத்தார் விழாவில் அருட்திரு. அன்ரன்ரெக்ஸ் அடிகளார் பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் "நத்தார் விழா குடித்து வெறித்து மகிழ்ச்சி கொண்டாடும் விழாவல்ல; இது உலகை ரட்சிக்க இறைவன் மனித வடிவில் அவதரித்த புனித விழாவாகும்" என்றார்.

நல்லூர் பரி. யாக்கோபு ஆலயப் பாடகர்குழுவும், சுண்டிக்குளி பரி. யோவான் ஆலயப் பாடகர் குழுவும், சுண்டிக்குளி பரி. அன்னம்மாள் ஆலயப் பாடகர் குழுவும், கோப்பாய் பரி.மரியாள் ஆலய பாடகர் குழுவும் நத்தார் பாடல்களைப் பாடி மகிழ்வித்தனர். (அ)

## உதைபந்தாட்ட இறுதிப்போட்டி

(நெல்லியடி)

பருத்தித்துறை உதைபந்தாட்டக் கழகத்தின் உதைபந்தாட்ட இறுதிப்போட்டியில் நெல்லியடி விளையாட்டுக் கழகமும் வதிரிடைமன் விளையாட்டுக்கழகமும் மோதிக் கொண்டன.

நெல்லியடி விளையாட்டுக்கழகம் ஒரு கோலைப் போட்டு அடித்து போட்டியில் வெற்றி பெற்று வெற்றிக்கேடயத்தைப் பெற்றுக்கொண்டது.

வெற்றிபெற்ற கழகத்திற்கு வெற்றிக்கேடயத்தை நெல்லியடி மத்திய மகா வித்தியாலய விளையாட்டு அரங்கில் வைத்து நெல்லியடிப்பட்டின சபையின் முன்னைநாள் தலைவர் திரு. என். பி. தேவசகாயம் வழங்கினார்.

பரிசளிப்புடன் மேற்படி உதைபந்தாட்டக் கழகச் செயலாளரும் கரவெட்டி தபாற்கந்தோரில் கடமை புரிந்து கொழும்பிற்கு இடமாற்றம் பெற்றுச் செல்பவருமான திரு எஸ்.சிவபிரானுக்கு பிரிவுபசாரமும் அளிக்கப்பட்டது. முன்னைநாள் இலங்கை வங்கி முகாமையாளர் திரு. வி. என். கந்தப்பு பிரதம பேச்சாளராகக் கலந்து கொண்டு உரையாற்றினார். [உ]

## பஸ்தரிப்பு நிலையங்கள்

[நெல்லியடி]

நெல்லியடி, குஞ்சர்கடை, கலிகை, கோவிற்சந்தை, மாலிசந் ஆகிய சந்திகளில் பஸ் பிரயாணிகளுக்கான தங்கும் இடங்களை அமைக்க உடுப்பிட்டி தமிழ்இளைஞர் பேரவை முயற்சி எடுத்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது. [உ]

## ஆண்டுவிழா

[யாழ்ப்பாணம்]

அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தின் ஆண்டுவிழா நாளை சனிக்கிழமை யாழ்ப்பாணத்தில் நடைபெறுகிறது. [அ]

## கல்லூரி 'கேற்' திருட்டு

(யாழ்ப்பாணம்)

கல்லூரி ஒன்றில் புதிதாகப் போடப்பட்ட "கேற்" அதுபோடப்பட்ட அன்றிரவே மறைந்து விட்டது. இது பற்றி பிரஸ்தாப கல்லூரி அதிபர் யாழ்பொலிஸில் புகார் செய்ததையடுத்து சந்தேகத்தின் பேரில் ஒருவர் கைது செய்யப்பட்டதுடன் "கேற்"றும் கல்லூரிக்கு அடுத்த வளவிலிருந்து பொலிஸாரால் மீட்கப்பட்டது.

யாழ். கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்திலேயே இக்களவு இடம் பெற்றது. கடந்த நான்கு தினங்களுக்கு முன் இக்கல்லூரியின் பின்பக்க வீதியான பூமகள் வீதியில் கல்லூரி எல்லையில் மதில் கட்டுவித்து அதிபர் "கேற்" ஒன்றும் போடுவித்திருந்தார். ஆனால் மறுதினம் காலை "கேற்" காணாமற் போனதை அறிந்த அயலவர் அதிபருக்கு அறிவித்ததைத் தொடர்ந்து அதிபர் நேரில் சென்று பார்வையிட்டு நிலைமையை யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தார்.

விசாரணை மேற்கொண்ட பொலிஸார் கல்லூரியின் அயற்பகுதியைச் சேர்ந்த கந்தையா என்பவரைக் கைது செய்தனர். விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது. [கா-அ]

## அட்டகிரி ஆலயத் தேர்

[யாழ்ப்பாணம்]

நவாலி வடக்கு அட்டகிரிக் கந்தசாமி கோவில் தேர் தேடுவாரற்றுக்கிடப்பதாக அடியார்கள் கவலை தெரிவிக்கின்றனர். இப்புதுத் தேர் கட்டப்பட்டு மூன்று வருடங்களுக்குள் வெய்யிலிலும் புழுதியிலும், மழையிலும் கிடந்து பழுதுறுகிறதாம். வயற்கரையிலே பாதுகாப்பற்ற திறந்த கொட்டகையிலே இத்தேர் விடப்பட்டுள்ளதாம். [அ]

# ரூ. 2 லட்சம் செலவில் 375 குடும்பங்கள் குடியமர்த்தப்பட்டன

## அகதிகள் புனர்வாழ்வுபற்றித் தகவல்

(யாழ்ப்பாணம்)

இனக்கலவரங்களால் பாதிப்புற்று வடபகுதிக்கு அகதிகளாக ஓடிவந்த தமிழ்க் குடும்பங்களுக்கு உடனடியாக நிவாரணம் அளிப்பதில் அகதிகள் நிவாரண - புனர்வாழ்வுக்கென ஆகஸ்ட் மாதம் நிறுவப்பட்ட குழுவினர் எடுத்துக்கொண்ட தன்முனைப்பான நடவடிக்கைகள் குறிப்பிடத்தக்கவகையில் பயன் அளித்திருப்பதாக மேற்படி குழுவின் தலைவர் திரு. ஜே. ஜி. அரசரட்ணம் தெரிவித்துள்ளார்.

முகாம்களில் [illegible] குடியமர்த்தப்பட [illegible] நூற்றுக்கணக்கான அகதிகளுக்காக காணிகளைப் பெற்று குடியமரச் செய்வதே குழுவின் முக்கிய பணியாகவிருந்தது. பல்வேறு தனியார் நிறுவனங்களினாலும் தனி நபர்களாலும் தாராளமாக வழங்கப்பட்ட காணிகளில் 375 குடும்பங்களை இக்குழு குடியமர்த்தியிருப்பதாகத் திரு. அரசரட்ணம் தெரிவித்துள்ளார். இந்தக் குடும்பங்களின் குடியமர்வுக்காக இரண்டு லட்சம் ரூபாய் வரையிலான தொகையை செலவு செய்யவேண்டிய நிலைமை குழுவுக்கு ஏற்பட்டுள்ளது என்றும் இதற்கான ஆரம்பச் செலவுகள் சமாளிக்கப்பட்டு வடக்கின் பல பகுதிகளிலும் குடியமர்வுகள் அமைதியாக நடைபெற்றுவருகின்றனவென்றும் திரு. அரசரட்ணம் தெரிவித்துள்ளார்.

மேற்கொண்டும் 225 குடும்பங்கள் இக்குழுவின் பொறுப்பிலுள்ளன. இவர்களின் குடியமர்வுக்காக ஆரம்ப நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. குழுவின் கோரிக்கையை ஏற்று இதுவரை சிறப்பாக உதவி புரிந்துள்ள பொது மக்கள் மேற்கொண்டும் காணியாகவும் பணமாகவும் உதவிகள் வழங்குவார்கள் என்று எதிர்பார்ப்பதாக திரு. அரசரட்ணம் தெரிவித்துள்ளார்.

பாதிக்கப்பட்ட மக்களின் நலன்களில் அக்கறை கொண்டுள்ள சகல இயக்கங்களுக்கும் மேற்படி பிரஜைகள் குழு உதவி புரிந்துள்ளது. அத்துடன் தனிப்பட்ட நபர்களுக்கும் தமது பழைய தொழில்களை நடத்தும்வகையில் பணமும் உதவியும் வழங்கப்பட்டுள்ளது. இந்த அகதிகளின் ஈடேற்றப்படுத்தோருக்கு மேற்கொண்டும் வசதிகளைச் செய்து கொடுத்து சமூக வாழ்க்கை முறையை ஏற்படுத்தவும் கிராமியப் பணிகளில் ஈடுபடச் செய்யவும் இரண்டாவது முயற்சி ஒன்றையும் இக்குழு மேற்கொள்ள திட்டமிட்டுள்ளது.

## நிர்வாகிகள்

[மன்னார்]

மன்னார் மனக்கட்டிக் கொட்டு புனித சூசையப்பர் கழகத்தின் நடப்பு வருடத்திற்கான நிர்வாகிகள் தெரிவு அண்மையில் புனித செபஸ்தியார் ஆலயவளவிலுள்ள பாலர் பகல் விடுதியில் நடைபெற்றது. நிர்வாகிகள் பின்வருமாறு:

தலைவர்: வி.பிரான்சிஸ் உபதலைவர்: நீக்கிலஸ் ஜேம்ஸ் பொதுச்செயலர்: அ. ஜேம்ஸ், துணைச்செயலாளர்: சூ.லேவிநாதன், பொருளாளர்: இ.அந்தோனி, துணைப் பொருளாளர்: இராயப்புசேகு இத்துடன் ஏழுபேர் செயற்குழு உறுப்பினராகத் தெரிவுசெய்யப்பட்டனர். (அ)

சுசி

∴ கலண்டர்கள் ∴ டயறிகள் ∴ பிளாஸ்டிக் டயறிகள்

மொத்தமாகவும் சில்லறையாகவும் கிடைக்கும். வடபகுதி விநியோகஸ்தர்கள்

S. P. சாமி அன் கொம்பனி

193, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.

## கிளிநொச்சிப் பகுதி நெற்பயிரில்

# பயிர்த்தத்தி தாக்கம்: விளைச்சல்பாழாகும் அபாயம்

(கிளிநொச்சி)

''கிளிநொச்சிப் பகுதியில் தற்பொழுது நெற்பயிரில் 'பயிர்த்தத்தி' பரவலாகக் காணப்பட்டு வருகிறது. ஒரு சில நாட்களுக்குள்ளாகவே இத்தத்திகள் பரவலாகப் பெருகக் கூடியன'' இவ்வாறு கிளிநொச்சி மேலதிக மாவட்ட விவசாய விஸ்தரிப்பு உத்தியோகத்தர் திரு. வி. ஏகம்பதாஸன் தெரிவித்துள்ளார்.

இதுபற்றி விவசாயிகளுக்கு சில அறிவுரைகளை அவர் கூறியிருக்கிறார். தற்போது இங்கு நிலவிவரும் காலநிலையில் இப் பயிர்த் தத்திகள் பன்மடங்காகப் பெருகக் கூடியவாய்ப்புகள் உண்டு என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

அவர் கூறுவதாவது:-

''நெல்லின் தண்டுப் பகுதியைச் சூழ்ந்து பல கபில நிறத்தை உடைய தத்திகள் காணப்படும். இத்தத்திகள் நெற்தண்டை குற்றி உறிஞ்சும். கபில நிறத்தத்தி ஒன்றின் நீளம் ஏறக்குறைய 10/3 அங்குலமாகும். இதன் அடிவயிற்றுப் பகுதி சிவப்பு நிறமாகவோ அன்றேல் கபில நிறமாகவோ காணப்படும். நெற்தண்டில் கையை வைத்தால் இவை தத்திப் பாய்வதை அவதானிக்கலாம்.

வயலில் உள்ள பயிர்கள் வட்டம் வட்டமாக இத்தத்திகளினால் முதலில் தாக்கப்படும். தாக்கப்பட்ட பயிர்கள் மஞ்சள் நிறம்அடைந்து பின்னர் கருகும். இதனைத் ''தத்தி எரிவு'' என்பர்.

கதிர்வந்து பால்பிடித்து முற்றும் நேரத்தில் தான் இதன் தாக்கம் மிகவும் மோசமானதாக இருக்கும். தத்தியினால் தாக்கப்பட்ட கதிர் சப்பியாயாகவே இருக்கும். கதிரில் மணி எதுவும் திரளமாட்டாது. பயிரும் எரிந்து, நசிந்து போகும். இது ஒரு கொடிய பூச்சித்தாக்கமாகும். விளைச்சல் முழுவதுமே பாழடையும்.

ஆகவே விவசாயிகள் நெற்பயிரில் இப்படியான பயிர்த்தத்திகள் காணப்பட்டால் உடனடியாகக் கீழ்வரும் தத்திகொல்லிகள் ஒன்றினை விசிறி இதனைக் கட்டுப்படுத்தவும் வேண்டும்.

3% பியூறடான் குறுணலை ஏக்கருக்கு 15-20 றூத்தல் வீதம் 1 அங்குலத் தண்ணீரில் போடவும்.

(வயலில் தண்ணீர் அதிகமாக இருந்தால் குறுணல் 100% தொழிற்படாது.)

3% கியூறேற்றர் குறுணலை ஏக்கருக்கு 15-20 றூத்தல் வீதம் 1 அங்குலத் தண்ணீரில் போடவும். வாசா 50% 20 நீர்ம அவுன்ஸ் 40 கலன் நீரில் கலந்து ஏக்கருக்கு விசிறவும். மிபோபால் 30% 25 நீர்ம அவுன்ஸ் 40 கலன் நீரில் கலந்து ஏக்கருக்கு விசிறவும். தமரோன் 20 அவுன்ஸ் 40 கலன் நீரில் கலந்து ஏக்கருக்கு விசிறவும்.

மேலதிக விபரங்களுக்கு உங்களது பகுதி விவசாயப் போதனாசிரியர் அல்லது உங்கள் பகுதி விவசாயச் சேவையாளருடன் உடன் தொடர்புகொள்ளவும் (உ)

## கிளிநொச்சியில் உழவர் விழா

[உருத்திரபுரம்]

கிளிநொச்சிப் பிரதேச முத்தமிழ் நுண்கலைக்கழகம் தைப் பொங்கல் நன்னாளை முன்னிட்டு தை 1-ம் திகதி திங்கட்கிழமை உழவர் விழா ஒன்றை நடாத்தவுள்ளது. இதனையொட்டி கிளிநொச்சி பிரதேச மாணவர்கள் எழுத்தாளர்கள், கலைஞர்கள் ஆகியோர்களுக்கான போட்டிகளையும் நடாத்த கழகம் முன்வந்துள்ளது. கட்டுரை, சிறுகதை புனைதல், நாடகம், விநோதஉடை ஆகியனவும் ஆணழகன் போட்டி சைக்கிள் ஓட்டப்போட்டி கலாச்சாரஊர்தி பவனிப்போட்டி ஆகியனவும் விழாவில் இடம் பெறும்.

காலை நிகழ்ச்சிகளாக கராட்டி, மல்யுத்தம், ஜல்லிக்கட்டு, ஆகியனவும் மாலை நிகழ்ச்சியாக ஊர்திப்பவனியும் இரவு பட்டிமன்றம், கவியரங்கு, சிறப்புச் சொற்பொழிவு, நடனம், இசை நாடகங்கள் ஆகியனவும் இடம்பெறவுள்ளன.

திருவாளர்கள் நா.சோதிநாதன், க.செ. வீரசிங்கம், ப.வை.ஜெயபாலன், பொன் இங்லைநாயகம், சி. பாக்கியநேசர், ஐ. துரைராசா, ஐ. திருஞானம் ஆகியோர் கொண்ட குழு அமைப்பு வேலைகளில் செயற்பட்டு வருகிறது. (அ)

## மாடுகள் திருடி வெட்டினார்களாம் இருவர் றிமாண்டில்

[பண்டத்தரிப்பு]

வீட்டில் கட்டியிருந்த இரு மாடுகளை இரவுவேளையில் திருடி இறைச்சிக்காக வெட்டிக்கொன்றதாகச் சங்கானைப் பொலிசாரால் கைது செய்யப்பட்ட இரு சந்தேக நபர்களையும் எதிர் வரும் ஜனவரி 8ம்திகதிவரை றிமாண்டில் வைக்குமாறு மல்லாகம் மாவட்ட நீதிபதி எம்.டி.ஜேசுரத்தினம் உத்தரவிட்டார்.

பண்ணாகத்தைச் சேர்ந்த விவசாயியான ஆசைப்பிள்ளை அப்புத்துரை என்பவரின் வீட்டில் கட்டியிருந்த 750ரூபா பெறுமதியான இருமாடுகளைக் காணவில்லை என்று சங்கானைப் பொலிஸ்நிலையத்தில் செய்த புகாரையடுத்து சப் இன்ஸ்பெக்டர் திரு. இராசையா, கான்ஸ்டபிள் எல். ஏ குணரத்தின ஆகியோர் சுழிபுரத்தைச் சேர்ந்த வேலன் செல்லையா, கனகன் காசிராசன் ஆகிய இருநபர்களை கைதுசெய்து மல்லாகம் நீதிமன்ற நீதவான் முன்னிலையில் ஆஜர் செய்தனர். [அ]

## பரீட்சை நிலையத்தில் ஒருசோதனை

[களுத்துறை]

நடந்து முடிந்த க.பொ.த. [சாதாரண] பரீட்சைக்கு தமிழ் இலக்கியத்திற்கு விண்ணப்பித்த கிறிஸ்ரியன் றெஜினோல்ட் என்னும் பரீட்சார்த்திக்கு சோதனை நிலையத்தில் பெரும் சோதனை காத்திருந்தது.

அவருடைய அனுமதி அட்டையில் தமிழ் இலக்கியத்துக்குரிய இலக்கம் குறிப்பிட்டு இருந்தபோதிலும் பரீட்சை மேற்பார்வையாளர்களுடைய பட்டியலில் கிரேக்கமொழி எனக்குறித்து அனுப்பியமையால் அவர்கள் இலக்கிய பரீட்சைக்கு பதிலாக கிரேக்க மொழிக்கே தோற்றும்படி பணித்தனராம்.

நீண்டநேரமாக வாதாடிய பின்னர் தமிழ் இலக்கியம் எடுக்க இவர் அனுமதிக்கப் பட்டபோதிலும், இதனால் இழக்கப்பட்டநேரம் அவருக்கு வழங்கப்படாததால் அவர் இலக்கிய வினாப்பத்திரத்துக்கு விடை அளிக்க நேரம் போதாமல் திண்டாடினாராம்.

இச்சம்பவம் களுத்துறையில் நடைபெற்றுள்ளது. [கி-அ]

## மேலும்இரு மந்திரிகள் ராஜினாமா

ஹைதராபாத், டிச.29

ஆந்திர மந்திரிசபையைச் சேர்ந்த மேலும் இருகாங்கிரஸ் மந்திரிகள் கட்சியில் இருந்தும் மந்திரிசபையில் இருந்தும் ராஜினாமாச் செய்து ஜனதா கட்சியில் சேர்ந்துள்ளனர். புருஷோத்தம ரெட்டி லஷ்மன்தாஸ் என்ற இருமந்திரிகளுமே இவர்கள். [உ]

## ஐ. தே. கட்சியில் 'கனகா'

[கொழும்பு]

அண்மையில் அரசாங்கக் கட்சிக்கு மாறிய பொத்துவில் தொகுதி இரண்டாவது [த. வி. கூட்டணி] எம்.பி. கனகரத்தினம் உத்தியோக [illegible] ஐக்கிய [illegible] தேசியக் கட்சி அங்கத்தவராகச் சேர்ந்து கொண்டார்.

திரு எம். கனகரத்தினத்தை ஐக்கிய தேசியக்கட்சியின் அங்கத்தவராக ஐ. தே.கட்சி நிர்வாகக்காரியதரிசி திரு. ஹர்ஷா அபேவர்த்தன சேர்த்துள்ளார்.

......

## உரியவர் யார்?

இருபாலைச்சந்திக்கு அருகில் வீதியில் கிடந்த இரு சாவிகள் கொண்ட கத்தி ஒன்றை வ. பரமலிங்கம் என்பவர் கண்டெடுத்து ''ஈழநாடு'' அலுவலகத்தில் ஒப்படைத்துள்ளார். உரியவர் ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளலாம்.


Regal (Jaffna)
Daily at 4-45, 7-00 & 9-30 P. M. only
FLESH OF THE ORCHID
(Color)
31-12-77 முதல்
ராஜ்குமார் நடித்த
மரியாதா (ஹிந்தி)
(ஈஸ்மன் கலர்)

ராணி [யாழ்ப்பாணம்]
தினசரி 10-30, 2.30, 6.00, 9.30.
எம். ஜி. ஆர்.-விஜயா, நாகேஷ் நடித்த
விவசாயி
(புதிய பிரதி)

சாந்தி (யாழ். நகர்) போன்: 7642.
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
சிவாஜி...... தேவிகா...... நாகேஷ்......
"நீலவானம்" கதைவசனம்: K.பாலசந்தர் (புதிய பிரதி)
அடுத்த வெளியீடு கலைஞர் கருணாநிதியின்
பூம்புகார் (புதிய பிரதி)

வெலிங்டன் [யாழ்.நகர்]
தினசரி 4 காட்சிகள்
முத்துராமன்-சுஜாதா-ஜெய்கணேஷ்
மூத்தாள முத்தல்லவோ

லிடோ எம். ஜி. ஆர். — லதா நடித்த
தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
(யாழ்.நகர்) போன்: 7698
நீதிக்கு தலைவணங்கு

மனோஹரா (யாழ் நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி- ஜெமினி - லக்ஷ்மி - நிர்மலா
உனக்காக நான்
(ஈஸ்ட்மன் கலர்)

வின்ஸர் யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
கமலஹாசன். ரஜனிகாந்த்
எம்.எஸ்.விஸ்வநாத் ஸ்ரீதேவி-ஒய். விஜயா
மூன்று முடிச்சு
திரை கதை வசனம், டைரக்ஷன்; கே. பாலசந்தர்

ஸ்ரீதர் தினசரி 4 காட்சிகள் (யாழ்ப்பாணம்)
முத்துராமன், ஜெயசித்திரா, சுந்தரராஜன், ஸ்ரீகாந்த்
இன்ஸ்பெக்டர் மனைவி

யாழ்.மாவட்டத்தில் ராஜா திரையரங்கில்மட்டும்
எல்லாக்காட்சிகளுக்கும்
தமிழ்த்தலைவர் அமரர் தந்தை செல்வாவின்
இறுதியாத்திரைக்காட்சி காண்பிக்கப்படும்.
எஸ். வி. ஆர். பிலிம்ஸ் வெளியீடு
[தினசரி காட்சி நேரங்கள்:
10-15, 2-00, 6-00, 9-45]
ஜெமினி - கே. ஆர். விஜயா
சீர்காழி கோவிந்தராஜன் - விஜயகுமாரி
நடித்த
P. V. C. தயாரிப்பு
தசாவதாரம்
(கலர்)
திரைக்கதை, வசனம், டைரக்ஷன்:
கே. எஸ். கோபாலகிருஷ்ணன்

நாகம்ஸ்
(கன்னாகம்)
தினசரி பி.ப. 6-45, 10-00
சனி, ஞாயிறு பி. ப. 2-30
எம்.ஜி.ஆர்-லதா
உழைக்கும் கரங்கள்

புலோலி சினிமாஸ்
(பருத்தித்துறை)
தினசரி 2-30, 6-30,
சிவாஜி -சரோஜாதேவி
விடிவெள்ளி

வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி: 4-45, 7-00, 9-30
Stage Coach

றியோ [யாழ்ப்பாணம்]
எமது ஸ்தாபனத்தின் பொறுப்பதிகாரி திரு. சி. ஆறுமுகம் [அட்வகேட்] அவர்களின் மறைவையொட்டி மறுஅறிவித்தல் வரை படக்காட்சிகள் காண்பிக்கப்படமாட்டா.

## மணிவாக்கு

ஒருவன் எவ்வளவுக் கெவ்வளவு அதிகமாக ஆசையை அநுபவிக்கிருனே அவ்வளவுக் கவ்வளவு துன்பமுமனுபவிக்கின்ருன்.

—காந்திமகான்

ஈழநாடு
The Eelanaadu

## கல்வி அமைச்சரின் திட்டம்

கல்வி அமைச்சர் திரு. நிஸங்காவிஜயரத்தின அடுத்த ஆண்டுமுதல் நாட்டிலுள்ள பாடசாலைகளுக்குத் திடீர் விஜயம் செய்து நிலைமையை நேரில் அவதானிக்க இருக்கிருர்.

இந்தத் திடீர்விஜயத்தின் போது பாடசாலைகளிலுள்ள பெற்ருேர் ஆசிரியர் சங்கத்தினரைச் சந்தித்துப் பாடசாலைகளின் பிரச்சினைகளையும் குறைகளையும் அறிந்து கொள்ளவும் பிரச்சினைகள் குறைகளிருந்தால் அவற்றுக்கு உடனடித் தீர்வு காணக் கல்வி அமைச்சர் உத்தேசித்துள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

கல்வி முறையில் அடிக்கடி மாற்றங்கள் செய்யப்பட்டு வந்து கடந்த ஆட்சிக்காலத்தில் ஏற்படுத்திய மாற்றம் மாணவர்களை மட்டுமல்ல ஆசிரியர்களையும் பெற்ருேர்களையும் கூடப் பெரும் குழப்பத்திலாழ்த்தியிருக்கிறது.

பாடசாலைகளில் ஒழுங்கான முறையில் கற்பிக்கப்படுகிறதா; மாணவர்கள் ஒழுங்கு கட்டுப்பாடு ஆகியவற்றைப் பின்பற்றுகிருர்களா; பாடசாலை நிர்வாகம் சிறந்த முறையில் நடைபெறுகிறதா என்பதை இப்போது யாருமே கவனிப்பதாகத் தெரியவில்லை.

சிலகாலத்திற்கு முன்னர் பாடசாலைகளுக்குத் தவணைக்கு த் த வணை வித்தியாதரிசிகள் விஜயம் செய்வார்கள். மாணவர்களை வகுப்புகளில்வைத்தே பரீட்சிப்பார்கள். வித்தியாதரிசிகள் பாடசாலைக்குவரப் போகிருர்களென்பதைத் தெரிந்துகொண்டதும் மாணவர்கள் மட்டுமல்லாது ஆசிரியர்களும்கூட அச்சமுறுவார்கள்.

வித்தியாதரிசிகளைப் போலவே தவணைக்குத் தவணை சுகாதார அதிகாரிகளும் பாடசாலைகளுக்குச் சென்று பிள்ளைகளின் ஆரோக்கியம்பற்றிப் பரிசோதித்து அதற்கேற்ற பரிகாரம்காணுவார்கள்.

இப்பொழுது கல்வியைப் பற்றியும் அக்கறையில்லை, பிள்ளைகளைப்பற்றியும் கவலையில்லை.

பிள்ளைகள் படித்துத்தேறினுலும் தேருவிட்டாலும் ஆசிரியர்களுக்கும் அதிபர்களுக்கும் சம்பளம் கிடைப்பது நிச்சயம்.

பாடசாலையும் இப்போது ஓர் அரசாங்க இலாகாவாகிவிட்டதால்பாடசாலைகளின் வளர்ச்சியில் அக்கறை பொதுவாகக் குறைந்துவிட்டது.

பாடசாலைகளுக்குத் திடீர் விஜயம் செய்து நிலைமையை நேரில் அவதானித்துப் பெற்ருேர் ஆசிரிய சங்கத்தினரையும் சந்தித்துக் குறைகளைத் தீர்க்கத் திட்டமிட்டுள்ள கல்வி அமைச்சரின் முயற்சி வெற்றி அளிக்க வேண்டுமென்பதே எமது ஆவலாகும்.

தமிழ்நாடு வெள்ளநிவாரணம்

# வெள்ளை அறிக்கைமீது சூடானவிவாதம்

சென்னை, டிச 29

தமிழ் நாட்டில் அண்மையில் ஏற்பட்ட புயல் வெள்ள நிலையைக் குறித்தும் தமிழ்நாடு அரசு எடுத்த நிவாரண நடவடிக்கைகளைக் குறித்தும் வெள்ளை அறிக்கையொன்றை தமிழ்நாடு சட்டமன்றத்தில் நிதியமைச்சர் சமர்ப்பித்து உரை நிகழ்த்திஞர்.

நிவாரணப் பணிகளில் இக்கட்டான நேரத்திலும் தமிழ்நாட்டில் சிறப்பான சேவை புரிந்தமைக்காக பாதுகாப்பு படையினருக்கும் விமானப் படையினருக்கும் அமைச்சர் நன்றி தெரிவித்துக் கொண்டார்.

விவாதத்தை எதிர்க்கட்சிகளின் சார்பில் தி. மு. கழகத்தைச் சேர்ந்த புலவர் கோவிந்தன் வெள்ளை அறிக்கை மீதான விவாதத்தை ஆரம்பித்து வைத்தார்.

மார்க்ஸிய கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் திரு. உமாநாத் பேசிய போது தமிழக அரசு சிறப்பான முறையில் நிவாரணப் பணிகளைச் செய்து வருகின்றது. ஆனல் எதிர்க்கட்சித் தலைவர் திரு. கருணாநிதி அரசைக் குறைகூறுவது கவலைதருவதாகும் என்ருர்.

ஜனதா கட்சி உறுப்பினர் திரு. வின்சன் பேசும் போது முன்பு கட்டப்பட்ட பாலங்கள், அணைக்கட்டுகள் போன்றவை உறுதியாகக் கட்டப்படவில்லை. அதனுல்தான் உடைப்புகள் ஏற்பட்டு வெள்ளம் மோசமாகப் பாதித்தது என்ருர். இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் கூத்தக்குடி சண்முகம் பேசும் போது வெள்ள நிவாரணப் பணிகளை அவதானிக்க எல்லா மட்டங்களிலும் சர்வகட்சி கமிட்டிகளை நியமிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

இவர் கூறிய சில வார்த்தைகளை சபையின் குறிப்பேட்டிலிருந்து நீக்க வேண்டும் என்று அரசாங்கத் தரப்பு உறுப்பினர்கள் கோரிஞர்கள்.

தாழை மு. கருணுநிதியின் சில வார்த்தைகள் சபையின் நடைமுறைக்கு உகந்தவையல்லவென்று கூறி அவைகளை சபைக் குறிப்பேட்டிலிருந்து நீக்குப்படி சபாநாயகர் உத்தரவிட்டார்.

இந்த விவாதத்தில் தி. மு. க. உறுப்பினர் திரு. தாழை மு. கருணுநிதிகலந்து கொண்டு பேசும்போது தமிழ்நாடு அரசின் நடவடிக்கைகளை மிகவும் காரசாரமாக விமர்சித்தார். வெள்ளை அறிக்கையில் உண்மைக்குமாருன தகவல்கள் கொடுக்கப்பட்டுள்ளனவென்றும் அவர் கண்டித்தார்.

# ஸ்ரீரங்கம் பெயர் திருவரங்கம் ஆகும்

## தமிழ்நாடு அரசு ஏற்பாடு

சென்னை, டிச. 29

ஸ்ரீரங்கம் ஸ்ரீ வில்லிப்புத்தூர் ஸ்ரீ வைகுண்டம் போன்ற தலங்களின் பெயர்களை திருவரங்கம். திரு வில்லிபுத்தூர் திருவைகுண்டம் என்று மாற்றவேண்டுமென மத்தியஅரசிடம் தமிழகஅரசு கேட்டிருக்கிறது. இதுபற்றிய தகவல் இன்று தமிழ்நாடு சட்டமன்றத்தில் வெளியிடப்பட்டது.

மத்தியஅரசுக்கு இதுபற்றி எழுதியிருப்பதாகவும் மத்திய அரசின் பதில் எதிர்பார்க்கப்படுவதாகவும் நிதியமைச்சர் திரு. மனேகரன் தெரிவித்தார்.

இதுகுறித்து தி. மு. க. தலைவர் திரு. மு. கருணுநிதி சபையில் கருத்து தெரிவிக்கையில் இம்மாதிரியான பெயர் மாற்றக் கோரிக்கை வட்டார உணர்விஞல்தான் ஏற்படுகின்றது என்று மத்தியஅரசு கருதுவது தவருகும் என்பதற்கு தமிழ்நாடு அரசு தகுந்த முறையில் விளக்கம்கொடுக்க வேண்டும் என வலியுறுத்திஞர்.

## அரசுக்கு...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

மற்ற போக்கேகாரணம் எனச் சிலர் குறைகூறினர்.

வர்த்தக அமைச்சர் திரு. அத்துலத் முதலியின் யாழ்ப்பாண விஜயத்தின்போது நாம் அமைச்சருக்கு வரவேற்பளிக்க வேண்டுமென்ருே, மலர்மாலை சூட்டவேண்டுமென்ருே கூறவில்லை. இனியும் கூறப்போவதில்லை.

ஆனல் உத்தியோகப்பற்றுள்ள கூட்டத்தில் கலந்து கொண்டோம். இதனுல் அரசுடன் சேர்ந்து விட்டோமென்ருே, ஐ. தே. கட்சியுடன் உறவு பூண்டு விட்டோமென்ருே கருத இடமில்லை. இந்த அடிப்படையில் திரு. யோகேஸ்வரனும் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தைத் திறந்து வைத்தார்.

இனக் கலவரத்தின் பின்னர் பாதிக்கப்பட்ட தமிழர்களின் நலன்களைக் கவனிக்க ஒவ்வொரு அமைச்சரையும் ஒரே நாளில் பலதடவை சந்தித்து அவர்களது உதவிகளைப் பெற்றுக்கொடுத்தோம். காரணம், அவர்களுக்கென்று உதவுவதற்கு எமது கையில் அரசாட்சி இல்லை. அப்படியெல்லாம் நடந்துவிட்டு யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த அமைச்சரை வராதே என்று கூற முடியுமா? சேவை ஏற்படும் போது முன்னைய அரசாங்க அமைச்சர்களை வரவேண்டாமெனக் கூறவில்லையா? என்று கூறிஞர். (செ)

வழக்கம்பரை விபத்து மரணம்:

# லொறிச்சாரதியும் கிளீனரும் பிணையில் விடுதலை!

## பெண்ணின் கால்கள் துண்டிப்பு

[பண்டத்தரிப்பு]

வழக்கம்பரையில் விபத்துக்குள்ளாகி ஒருவரைப் பலி எடுத்த லொறிச் சாரதியையும், கிளீனரையும் தலா 1500 ரூபா பிணையில் செல்லுமாறு மல்லாகம் நீதிமன்ற நீதிபதி எம். டி. ஜேசுரத்தினம் உத்தரவிட்டார்.

கடந்த வெள்ளிக்கிழமையன்று பூவரசங்குழை ஏற்றிக் கொண்டுவந்த இந்த லொறி பாதையை விட்டு விலகி மின்கம்பத்துடன் மோதி கனகசுந்தரம் என்பவரை ஸ்தலத்தில் பலி கொண்டது தெரிந்ததே. இந்த விபத்தில் காயமடைந்து யாழ்ப்பாணம் அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த தங்கம்மா என்னும் பெண்ணின் இரு கால்களும் சத்திர சிகிச்சைமூலம் துண்டிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

சங்கானை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி இன்ஸ்பெக்டர் திரு. இராசையா, கான்ஸ்டபிள் எல். ஏ. குணரத்தின ஆகியோர் பிரஸ்தாப லொறிச் சாரதியான யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மாரிமுத்து துரைராசா, லொறிக் கிளீனர் சின்னன் ஆண்டி ஐயா ஆகிய இருவரையும் கைது செய்து மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்தனர்.

பிரஸ்தாப லொறியைப் பரிசோதனை செய்த பரிசோதகர் திரு. குணரத்தின தமது அறிக்கையில், தேய்ந்துபோன, பாவனைக்கு உதவாத டயரைப் பாவித்ததினுலும், வேகமாக லொறியைச் செலுத்திவந்ததாலுமே இந்த விபத்து ஏற்படக் காரணமாக இருந்தது என்று தெரிவித்துள்ளார்.

இவ்வழக்கின் மேல் விசாரணை ஜனவரி மாதம் 11 ம் திகதி மல்லாகம் நீதிமன்றத்தில் நடைபெறும். [அ]

ஈழத்தில் சைவம்:

# தமிழகப் பேராசிரியர் பெருமிதம்

(பண்டத்தரிப்பு)

''ஈழத்துத் தமிழ் மக்கள் மத்தியில் சைவசமய ஆகமங்களும், கிரியைகளும் மிகவும் சிறப்பான முறையில் கடைப்பிடிக்கப்படுவதை நேரில் கண்டு மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். குறிப்பாகத் தமிழ்நாட்டிலும் பார்க்க ஈழத்தில் கந்தசஷ்டி விரதம் அனுட்டிக்கும் வழக்கம் அதிகமாகப் பரவியிருப்பதை காணமுடிகின்றது.''

இவ்வாறு அண்ணுமலைப் பல்கலைக்கழகப் பேராசிரியர் கு. சுந்தரமூர்த்தி அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார் ஆலயமண்டபத்தில் சிறப்புரையாற்றுகையில் குறிப்பிட்டார். (அ)

## மரண அறிவித்தல்

### ரேஜினிஞானரட்டினம்

திரு, திருமதி ஞானரட்டினம் அவர்களது சிரேஷ்ட புதல்வி ரேஜினி இறைவனடி சேர்ந்துவிட்டார். இவர் திரு. திருமதி யோன்துரைரட்டினம் அவர்களின் பேத்தியாருமாவார். மரணச்சடங்குகள் 31-ம் திகதி சனிக்கிழமை காலை 8-30 மணியளவில் நடைபெறும்.
155, ஆஸ்பத்திரி வீதி.
யாழ்ப்பாணம். 8053

## மரண அறிவித்தல்

### திருமதி இரத்தினசிங்கம்

உடுப்பிட்டி மகளிர் கல்லூரி ஆசிரியை திருமதி புளோரென்ஸ் புஸ்பரத்தினம் இரத்தினசிங்கம் காலமானர். இவர் உடுப்பிட்டி A. M. C. இல் கற்பித்து இளைப்பாறிய திரு. V. S. C இரத்தினசிங்கத்தின் அன்பு மனைவியும் தர்மராஜினி இரத்தினசிங்கம், இரத்தினராஜன் ஆகியோரின் அன்புத் தாயாரும், R. J. D. அரியரத்தினம் [கல்வித் திணைக்களம், யாழ்ப்பாணம்]. A. D. துரைரத்தினம் [A.G.A. கந்தோர் அடம்பன்], D. A. மாசிலாமணி [இளைப்பாறிய தபால் அதிபர்] ஆகியோரின் சகோதரியும் ஆவார். அன்ஞரின் பூதவுடல் 31-12-77 காலை 8-30 மணிக்கு உடுப்பிட்டி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். உற்ருர் உறவினர் யாவரும் இவ் அறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும். 8053

'ஈழநாடு'

# தினக்குறிப்பு 1978

விற்பனையாகின்றது

விலை:- ரூபா 4-50 சதம்

வியாபாரிகளுக்கு கழிவுண்டு.

தொடர்பு கொள்ளவும்:-

கலாநிலையம் பதிப்பகம்

303, கே. கே. எஸ். வீதி,

யாழ்ப்பாணம்.

தொலைபேசி; 7707

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் இவன்ஹோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 30-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The EelanaaduPost Box No. 49, Jaffna. Telegram Eelanaadu. Telephone 389. Registered as a Newspaper in SriLanka.